# ஆகஸ்ட் - 07 - திங்கள்

## புனித கயித்தார்

## "நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்" (மத் 14:16)

### முதல் வாசகம் : எண்ணாகமம்11 : 4 – 15

மேலும் அவர்களிடையே இருந்த பல இன மக்கள் உணவில் பெரு விருப்புக்கொண்டனர் இஸ்ரயேல் மக்களும் மீண்டும் அழுது கூறியது. "நமக்கு உண்ண இறைச்சி யார் தருவார்?நாம் எகிப்தில் செலவின்றி உண்ட மீன்இ வெள்ளரிக்காய், கொம்மட்டிக்காய், கீரைஇ வெங்காயம்இ வெள்ளைப் பூண்டு ஆகியவற்றின் நினைவு வருகிறது.ஆனால் இப்பொழுதோ நம்வலிமை குன்றிப் போயிற்று. மன்னாவைத் தவிர வேறெதுவும் நம் கண்களில் படுவதில்லையே!". மன்னா கொத்துமலிலி விதைபோன்றும் அதன் தோற்றம் முத்துப்போன்றும் இருந்தது.மக்கள் வெளியில் சென்று அதைச் சேகரித்தனர் அரவைக் கல்லில் அரைத்தனர் அல்லது உரலில் போட்டு இடித்தனர் பானைகளில் அதை வேக வைத்து அதில் அப்பங்கள் செய்தனர் அதன் சுவை எண்ணெயில் செய்த அப்பங்களின் சுவையை ஒத்திருந்தது.இரவில பாளையத்தின்மேல் பனி விழும்போது மன்னாவும் அதனுடன் விழுந்தது.எல்லா வீடுகளிலுமிருந்த மக்களும் தம்தம் கூடார வாயிலில் இருந்து அழும் குரலை மோசே கேட்டார் ஆண்டவரின் சினம் கொழுந்துவிட்டெரிந்தது. மோசேக்கும் அது பிடிக்கவில்லை. மோசே ஆண்டவரிடம் கூறியது: உம் அடியானுக்கு ஏன் இந்தக்கேடு? நீர் எனக்குக் கருணை கட்டாமல் இம்மக்களின் எல்லாப் பளுவையும் என்மேல் சுமத்தியது ஏன்? இம்மக்களை யெல்லாம் நானா கருத்தரித்தேன்? நானா இவர்களைப் பெற்றெடுத்தேன்? "பாலுண்ணும் குழந்தையை ஏந்திச் செல்பவள் போன்று இவர்களை மார்போடு ஏந்தி, அவர்கள் மூதாதையருக்கு நான் வாக்களித்திருந்த நாட்டுக்குக் கொண்டு செல்" என்று நீர் சொல்வானேன்?. இம்மக்கள் அனைவருக்கும் கொடுக்க வேண்டிய இறைச்சிக்கு நான் எங்குபோவேன்? அவர்கள் எனக்கு முன் அழுதுஇ "உண்ண எங்களுக்கு இறைச்சி தாரும்" என்றும் கேட்கிறார்களே?நான் தனியாக இம்மக்கள் அனைவரையும் கொண்டு செல்லவே முடியாது இது எனக்கு மிகப்பெரும் பளு.இப்படியே எனக்குச் செய்வீரானால் உடனே என்னைக் கொன்றுவிடும் உம் பார்வையில் எனக்குத் தயை கிடைத்தால் இந்தக் கொடுமையை நான் காணாதிருக்கட்டும்.

**பதில்பாடல் :** நமது வலிமையாகிய கடவுளைப் புகழ்ந்து பாடுங்கள்

### நற்செய்தி : மத்தேயு 14 : 13 - 21

அக்காலத்தில் திருமுழுக்கு யோவான் கொலையுண்டதைக் கேள்வியுற்ற இயேசுஇஅங்கிருந்து புறப்பட்டுப் படகிலேறிப் பாலைநிலத்திலுள்ள தனிமையான ஓர் இடத்திற்குச் சென்றார். இதைக் கேள்விப்பட்ட திரளான மக்கள் ஊர்களிலிருந்து கால்நடையாக அவரைப் பின்தொடர்ந்தனர்.இயேசு அங்குச் சென்றபோது பெருந்திரளான மக்களைக் கண்டு அவர்கள்மீது பரிவுகொண்டார் அவர்களிடையே உடல் நலமற்றிருந்தோரைக் குணமாக்கினார்.மாலையானபோது, சீடர் அவரிடம் வந்து, "இவ்விடம் பாலைநிலம் ஆயிற்றே, நேரமும் ஆகிவிட்டது. ஊர்களுக்குச் சென்று தங்களுக்குத் தேவையான உணவு வாங்கிக்கொள்ள மக்கள் கூட்டத்தை அனுப்பிவிடும்" என்றனர். இயேசு அவர்களிடம், "அவர்கள் செல்ல வேண்டியதில்லை நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்" என்றார்.ஆனால் அவர்கள் அவரைப் பார்த்து, "எங்களிடம் இங்கே ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் தவிர வேறு எதுவும் இல்லை" என்றார்கள்.அவர், "அவற்றை என்னிடம் இங்கே கொண்டு வாருங்கள்" என்றார். மக்களைப் புல்தரையில் அமருமாறு ஆணையிட்டார். அவர் அந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்து பார்த்து, கடவுளைப் போற்றி, அப்பங்களைப் பிட்டுச் சீடர்களிடம் கொடுத்தார். சீடர்களும் மக்களுக்குக் கொடுத்தார்கள்.அனைவரும் வயிறார உண்டனர். எஞ்சிய துண்டுகளைப் பன்னிரண்டு கூடைகள் நிறைய எடுத்தனர்.பெண்களும் சிறு பிள்ளைகளும் நீங்கலான உணவுண்ட ஆண்களின் தொகை ஏறத்தாழ ஐயாயிரம்.

**தியானம் :** நாம் உயிர் வாழ உணவு அத்தியாவசியம். பல நாட்கள் நாம் உணவு உண்ணாமல் இருந்தால் இறந்துவிடுவோம். இன்றைய வாசகங்கள் மனிதர்களின் உணவுத் தேவையைப் பற்றி கூறுகின்றன. நம்மில் பலருக்கு மிக சுவையான உணவு வேண்டும். சிலர் வயிற்றுப்பசிக்கு உண்டால் போதும் என்று நினைப்பார்கள். சிலருக்கு உடலில் ஏற்பட்ட நோயின் தாக்கம் காரணமாக கட்டுப்பாடான உணவுமுறை. இருப்பதைக் கொண்டு திருப்தி அடைய எம்மால் முடிவதில்லை. இல்லாத ஒன்றையே நாடுவோம். இஸ்ராயேல் மக்கள் தம்மை அடிமைத்தனத்தில் இருந்து மீட்டருளும் என்று கடவுளை நோக்கி அழுதார்கள். கடவுள் அவர்களின் அழுகுரலை கேட்டு அவர்களை மீட்க மோயீசனை அனுப்பினார். ஆனால் இப்போது அந்த அடிமைத்தன வாழ்வை மறந்துவிட்டு உண்ண இறைச்சி இல்லை என்று முணுமுணுக்கிறார்கள். இவ்வாறுதான் நாமும் எமது பழைய வாழ்வை மறந்து போய்விடுகின்றோம். எமது தாயக தேசத்தில் இருக்கும்போது ஷெல் வீச்சுக்கும், குண்டு தாக்குதலுக்கும் பயந்து வாழ்ந்தோம். இப்போது அனுபவிக்கின்ற சுகபோகமான வாழ்க்கையால் அவற்றை மறந்து மற்றவர்களை மதிக்காமல், ஏளனம் செய்து, தேவையற்ற காரியங்களிற்கு பணத்தை செலவு செய்கின்றோம். இன்றும் எத்தனையோ நாடுகளில் குழந்தைகளும் பெரியவர்களும் பட்டினியால் வாடி இறக்கின்றார்கள். ஒருவேளை உணவிற்காக கையேந்தி நிற்கிறார்கள். நாளாந்தம் எமது வீடுகளில், உணவகங்களில் அநியாயமாக வீசப்படும் உணவுகள் பலரின் பசியை ஆற்ற போதுமானது என்று தெரியுமா? சிந்திப்போம்